# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,685/16 — 1966 මාර්තු 10 වැනි බ්‍රහස්පතින්ද — 10.3.1966

14,685/16 ம் இலக்கம் — 1966 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.—சிஎவ். 1/64 — ஜி.-ஜி. ஓ. இல. டபிள்யு. 68/66 (3)

### பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ம் பிரிவின் கீழ் இராசாங்க அமைச்சரின் ஆலோசனையின்படி ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, மார்ச்சு 10, 1966.

டபிள்யூ. கோபல்லவ,
மகாதேசாதிபதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், இறக்குமதிசெய்யப்பட்ட பொருள்களை உரித்தாக்கல் (அவசரகால) ஒழுங்குவிதிகள், 1966 என எடுத்துக்காட்டப்படலாம்.

2. தமது தனித் தற்றுணிபின்படி, நீதியமைச்சர் சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்குதல்களையும் சேவைகளையும் நடாத்திவருவதன் பொருட்டு அவ்விதம் செய்தல் தேவையானதெனக் கருதுமிடத்து, அவர் கட்டளைமூலம், இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் தொகுதியை அல்லது அதன் பகுதியை முடிக்கு உரித்தாக்கலாம்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ், ஏதேனும் பொருளின் தொகுதி அல்லது, விடயத்துக்கேற்ப, அதன் பகுதி தொடர்பாக கட்டளையொன்று இடப்பட்டதும், அத்தகைய பொருளின் தொகுதி அல்லது அதன் பகுதி எத்தகைய பாதிப்புமின்றி முடிக்கேயுரித்தாதல் வேண்டும் அத்துடன் நீதியமைச்சரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதமாகக் கையாளப்படலாம்.

4. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழாக்கப்பட்ட கட்டளையொன்றன் மூலம் ஏதேனும் பொருளின் தொகுதி அல்லது அதன் பகுதி முடிக்குரியதாக்கப்பட்டிருக்குமிடத்து, முடியின் சார்பில் நீதியமைச்சர், அதற்கென ஒரு கோரிக்கை செய்யப்படுமிடத்து அப்பொருளின் தொகுதியின் அல்லது அதன் பகுதியின் அனுப்புபொருட்பட்டியற் பெறுமதித் தொகைக்குச் சமமானதொரு தொகையையும் அத்தொகையின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான தொகையையும் அப்பொருளின் தொகுதிக்கென அல்லது அதன் பகுதிக்கென நட்ட ஈடாக அதனை இறக்குமதி செய்தவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, நீதியமைச்சர் முடிக்குரியதாக்கப்பட்ட ஒரு பொருளின் தொகுதி அல்லது அதன்பகுதி தொடர்பான நட்ட ஈட்டினைக் கொடுத்துத் தீர்க்குமிடத்து அத்தகைய கொடுப்பனவு அந்த நட்ட ஈட்டுத் தொடர்பில் முடிக்குரிய பொறுப்புகளை முழுவதாக நீக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதலாம் பந்தியின் கீழ் நட்டஈடு கொடுக்கப்படவேண்டியுள்ள எவரேனும் ஒருவர், அந்த நட்ட ஈடு அவருக்குக் கொடுக்கப்பட்டபொழுது அதனை ஏற்க மறுத்தால் அல்லது அத்தகைய ஆள் இறந்திருந்தால் அல்லது அவரைத் தேடியறியமுடியாதிருந்தால் அல்லது சொல்லப்பட்ட பொருளின் தொகுதியின் அல்லது அதன் பகுதியின் இறக்குமதியாளர் யார் எனப்பிணக்கேற்பட்டிருந்தால் அல்லது நட்ட ஈட்டுக்கென கோரிக்கை எதுவும் செய்யப்பட்டிராவிட்டால், அப்பந்தியின் கீழ் கொடுபடுவதற்குரிய நட்ட ஈட்டின் தொகை எழுநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படுதலை அல்லது மேற்படாதிருத்தலைப் பொறுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது கொழும்பு விண்ணப்ப நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ்செய்தல் மூலம் அந்நீதிமன்றத்தின் எண்ணப்படி அப்பணத்திற்கு உரித்துடையவரான ஆள் அதனைப் பெறுதல் வேண்டும்.

(4) மூன்றும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது கொழும்பு விண்ணப்ப நீதிமன்றத்தில் ஏதேனும் நட்ட ஈட்டுத் தொகை ஒப்படைக்கப்படுமிடத்து, முதலாம் பந்தியின் கீழ் இறக்குமதியாளருக்குக் கொடுக்கப்படவேண்டிய நட்ட ஈட்டுத் தொகையினை முடி கொடுத்துத் தீர்த்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அதற்கேற்ப அத்தகைய ஒப்படைப்பு அந்த நட்ட ஈட்டுத் தொடர்பில் முடிக்குரிய பொறுப்புகளை முழுவதாக நீக்குவதாகி அவ்விதம் கருதப்படுதல் வேண்டும்.

5. (1) ஏதேனும் பொருளின் தொகுதியை அல்லது அதன் பகுதியை முடிக்குரியதாக்கும் ஒரு கட்டளை இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் இடப்படுமிடத்து, நீதியமைச்சரால் பொதுவில் அல்லது சிறப்பாக அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எவரும் அப்பொருளின் தொகுதியை அல்லது அதன் பகுதியை ஆட்சி எடுக்கலாம், ஆட்சி எடுப்பதற்கு வேண்டிய எல்லாச் செயல்களையும் செய்யலாம்.

(2) முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தமது கடமைகளைப் புரிவதை அல்லது உரிமையைப் பிரயோகிப்பதைத் தடைசெய்கின்ற அல்லது மறிக்கின்ற ஆள் எவரும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவர்.

6. எழுத்திலுள்ள வேறு நியாயப்பிரமாணத்தின் ஏற்பாடுகள் எவ்விதமிருப்பினும் இவ் ஒழுங்குவிதிகள் பயனுடையனவாதல் வேண்டும்.


இலங்கை வாலையூசிலே ஈஸ்வரண மிப்பபா மில்ஸ் கோபப்பிரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

150/49